ஒரே பாரதம்,
வலிமையான பாரதம்.

அனைவரின் ஒத்துழைப்பு
அனைவரின் வளர்ச்சி

2014 தேர்தல் அறிக்கை முக்கிய அம்சங்கள்

பாரதிய ஜனதா கட்சி

முன்னுரை

இன்று இந்தியா ஜனநாயகம்,மக்கள் மற்றும் விருப்பங்களின் தகுதி மற்றும் வாய்ப்பினை அரிதாக பெற்றுள்ளது. இவற்றை ஒன்று திரட்டி பயன்படுத்திக்கொள்ள முடிந்தால் இந்தியா அடைய வேண்டிய உச்சத்தை நம்மால் நிச்சயம் அடைய முடியும். தற்போதுள்ள மோசமான நிலைக்கு காரணம் 60 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்தவர்களின் தவறான நோக்கமே ஆகும். இங்கு தான் நாம் வேறுபாட்டை அளிக்க விரும்புகிறோம். பா.ஜ.கவை பொறுத்தவரை இலக்கு மற்றும் செயல்பாடு , ஒரே பாரதம்,வலிமையான பாரதம் என்பதாக இருக்கும். இதற்கான வழி, சப்கா சாத்,சப்கா விகாஸ். தேசம் மற்றும் மக்களுக்கு இது தான் எங்கள் உறுதி மொழி.

வசிகரமிக்க தலைவரான நரேந்திர மோடி தலைமையின் கீழ் கட்சி இந்த உறுதியுடன் 16 வது மக்களவைத்தேர்தலை எதிர்கொள்கிறது. இந்தியாவுக்கு நிலையான ,வலுவான, தொலைநோக்கான முற்போக்கு ஆட்சியை அளிக்க உறுதி கொண்டுள்ளோம்.

நம்முடைய மற்றும் தேசத்தின் தலைவிதியை மாற்றுவதற்கான வாய்ப்பு.

இந்தியாவை உருவாக்குவது

நவீன தொழில்நுட்பம் மற்றும் உள்கட்டமைப்பு வசதி கொண்ட 100 **புதிய நகரங்களை** உருவாக்குவது .

**நாட்டின் 100 பின் தங்கிய மாவட்டங்களை** முன்னுரிமை மற்றும் ஒருங்கிணைந்த வளர்ச்சி மூலம் மற்ற மாவட்டங்களுக்கு நிகராக உருவாக்குவது.

மின்சாரம், குடிநீர் மற்றும் கழிவறை வசதி கொண்ட இருப்பிடத்தை எல்லோருக்கும் உறுதி செய்வது.

கிராமப்புற புத்துயிர்ப்புக்கான முழு அளவிலான திட்டம். **ரூர்பன்** கருத்தாக்கத்தின் மூலம் ,கிராமங்களின் ஆன்மாவை தக்க வைத்துக்கொள்ளும் அதே நேரத்தில் கிராமப்புற பகுதிகளுக்கு நகர்புற வசதிகளை அளிப்பது.

பொறுப்பான மற்றும் விரிவான தேசிய எரிபொருள் கொள்கையை வகுப்பது.

வீடுகள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு எரிவாயு கிடைக்கும் வகையில் **காஸ் கிரிட்** அமைப்பது.

கிராமங்கள் வரை தேசிய கண்ணாடி இழை வலைப்பின்னலை உருவாக்குவது. பொது இடங்களில் வயர்லஸ் மையம் அமைப்பது.

அதிவேக ரெயில் சேவை வலைப்பின்னல் (**புல்லட் டிரெய்ன்**) கொண்ட **வைர நாற்கசர** திட்டம்.

விவசாய ரெயில் வலைப்பின்னல், யாத்திரிகர்கள் ரெயில் வலைப்பின்னல் மற்றும் முக்கிய புதிய ரெயில் வலைப்பின்னல் கொண்ட சுற்றுலா ரெயில் வலைப்பின்னல் அமைப்பது.

இந்தியாவின் 75 வது சுதந்திர தின விழாவுக்கு முன்பாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் சொந்த வீடு இருப்பதி உறுதி செய்ய **குறைந்த செலவில் வீடு கட்டும் திட்டம்.**

விலைவாசியை கட்டுப்படுத்தல்

கள்ளச்சந்தையை தடுக்க கடும் நடவடிக்கை மற்றும் சிறப்பு நீதிமன்றங்கள்.**விலைவாசியை கட்டுப்படுத்த சிறப்பு நிதி.**

**இந்திய உணவு கழகத்தின்** செயல்பாடுகளை சிறப்பான செயல்பாட்டிற்காக கொள்முதல்,சேமிப்பு மற்றும் விநியோகம் என பிரிப்பது.

**தேசிய விவசாய சந்தையை உருவாக்குவது**.

ஊழலுக்கு எதிராக

**ஊழலுக்கான வாய்ப்பை இல்லாமல்** செய்யும் அமைப்பை உருவாக்குவது.

**தொழில்நுட்ப வசதி கொண்ட மின்நிர்வாகம்**. அரசு -மக்கள் இடைமுகத்தில் பாரபட்சத்தை குறைப்பது.

அமைப்பு சார்ந்த ,கொள்கை அடிப்படையிலான **நிர்வாகம் வெளிப்படையான தன்மை கொண்டது.**

**எல்லா மட்டங்களிலும் செயல்முறை மற்றும் வழிமுறைகளை எளிமைப்படுத்துவது.** மக்கள்,அமைப்பு மற்றும் நிறுவனங்கள் மீது நம்பிக்கை ஏற்படுத்துவது.

வேலை வாய்ப்பு மற்றும் தொழில்முனைவு

**தொழிலாளர்கள் சார்ந்த** ஜவுளி, உள்கட்டமைப்பு ,வீட்டுவசதி மற்றும் தொலைதொடர்பு துறைகளை மேம்படுத்துவது.

பாரம்பரிய வேலைவாய்ப்பு தளங்களான **விவசாயம்** மற்றும் தொடர்புடைய துறைகள் , **சில்லரை வணிகத்தை** நவீனமயமாக்கல் மூலம் வலுவாக்குதல்.

வேலைவாய்ப்பு மையங்களை **வேலை மையங்களாக** மாற்றுவது

பெண்கள் -தேசத்தை உருவாக்குபவர்கள்

சட்ட திருத்தம் முலம் நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களில் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு.

பெண் குழந்தைகளை காப்பாற்றி கல்வி அளிக்கும் தேசிய திட்டம்; **பேட்டி பச்சாவோ, பேட்டி பதாவோ**

பெண்களுக்கான ஐ.டி.ஐ மற்றும் ஐ.டி.ஐகளில் பெண்கள் பிரிவை ஏற்படுத்துவது.

அமில வீச்சு தாக்குதலால் பாதிக்கப்படுபவர்களின் சிகிச்சை மற்றும் பிளாஸ்டிக் சர்ஜரிக்கான செலவுகளுக்கு நிதி அளிப்பதற்கான அமில வீச்சால் பாதிக்கப்பட்டோர் நலவாழ்வு நிதி அமைக்கப்படும்.

காவல் நிலையங்களை பெண்களுக்கு நட்பானவையாக்கி, காவல் துறையில் பல்வேறு மட்டங்களில் பெண்களின் எண்ணிக்கையை உயர்த்துவது.

எஸ்.சி, எஸ்.டி, ஒ.பி.சி மற்றும் இதர நலிவடைந்தோர்; சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல்

**சமூக நீதி** மற்றும் **சமூக நல்லிணக்கம்** கொள்கைகள் மூலம் இடைவெளியை குறைப்பது.

எல்லா மட்டங்களிலும் தீண்டாமையை ஒழிக்க உறுதி.

எஸ்.சி, எஸ்.டி ,ஒ.பி.சி, மற்றும் இதர நலிவடைந்தோருக்கான சிறப்பு கவனம் கல்வி மற்றும் தொழில் முனைவுக்கான சூழலை உருவாக்கும்.

எஸ்.சி, எஸ்.டி ,ஒ.பி.சி, மற்றும் இதர நலிவடைந்தோருக்கான திட்டங்கள் மற்றும் செயல்களுக்கு  ஒதுக்கப்பட்ட நிதி முறையாக பயன்படுத்தப்படுவதை உறுதி செய்வது.

வீட்டு வசதி, கல்வி, சுகாதாரம் மற்றும் திறன் வளர்ச்சிக்கான குறிக்கோளுடன் கூடிய செயல்திட்டம்.

பழங்குடியினருக்கான ஒட்டுமொத்த கல்வி வலைப்பின்னலை அமைப்பது மற்றும் வீட்டு வசதி, குடிநீர்,சுகாதாரம் மற்றும் சாலை மற்றும் எரிசக்தி வசதிகளை அளிப்பது.

பழங்குடியினர் பகுதி அந்நியப்பட்டு போகாம்ல் இருப்பதை உறுதி செய்வது.

சிறுபான்மையினர் ; சமமான வாய்ப்புகள்

சிறுபான்மை கல்வி அமைப்பு மற்றும் நிறுவனங்களை வலுவாக்கி நவீனமயமாக்க **தேசிய மதராசக்கள் நவீனமயமாக்கல்** திட்டம் செயல்படுத்தப்படும்.

நம்முடைய குடிசைத்தொழில் மற்றும் சிறுதொழில்களின் முதுகெலும்பாக இருக்கும் அவர்களுடைய பாரம்பரிய கைவினை கலை மற்றும் தொழில்முனைவு தன்மையை மேம்படுத்துவது.

வன்முறையை விதைப்பவர்கள் மற்றும் அச்சத்தை பயன்படுத்திக்கொள்பவர்களுக்கு இடமில்லாத வகையில் **அமைதியான** மற்றும் **பாதுகாப்பான** சூழலை உறுதி செய்வது.

புதிய நடுத்தர வர்கம்; அவர்கள் விருப்பங்களை நிறைவேற்றுவது

கல்வி உதவித்தொகை, கல்வி வசதிகள், மருத்துவ காப்பீடு, தரமான மருத்துவ

வசதிகள், நடுத்தர வருமான வீட்டு வசதி மற்றும் சிறந்த பொது போக்குவரத்து வசதிகளை அளிப்பது.

தீவிரவாதத்தை துளியும் பொறுத்துக்கொள்ளாத தன்மை

தீவிரவாதத்துக்கு எதிரான முறையை புதுப்பித்து , என்.ஐ.ஏவின் பங்கை வலுவாக்கி,தீவிரவாதம் தொடர்புடைய வழக்குகளை விறைந்து விசாரித்து நடவடிக்கை எடுப்பதற்கான வழிமுறை.

தேசிய பார்துகாப்பு கவுன்சிலை, தொடர்புடைய எல்லாவற்றையும் கவனிக்கும் மையமாக்கும் வகையில் சீரமைப்பது. உளவுத்தகவல்களை உடனடியாக வழங்க அது பொறுபேற்க வேண்டும்.

புலணாய்வு துறையை நவீனமயமாக்கி உளவு தகவல்களை சேகரிக்கும் முறையை முற்றிலும் மாற்றியமைப்பது.

மூத்த குடிமக்கள்

நிதி உதவி அளித்தல். கூடுதல் வரிச்சலுகை மற்றும் அதிக வட்டி சலுகை போன்றவற்றை பரிசிலிப்பது.

அவர்கள் அனுபவத்தை தேசிய நலன் கருதி பயன்படுத்திக்கொள்வது.

மாற்றுத்திறனாளிகள்

மாற்றுத்திறன் கொண்டவர்களின் உரிமைகள் சட்டத்தை (ஆர்.பி.டபில்யு.டி ) அமலாக்குவது.

நாட்டில் உள்ள ஒவ்வொரு சிறப்புத் தேவை கொண்டவர்களை கண்டறிந்து ,இணையம் சார்ந்த மாற்றுத்திறனாளிகள் பட்டியலை உருவாக்குவது.

இளைஞர்கள்; இந்தியாவை பீடு நடை போடச்செய்பவர்கள்.

தேசிய இளைஞர் ஆலோசனை கவுன்சிலை அமைப்பது மற்றும் வளர்ச்சிக்கான இளைஞர் திட்டத்தை உருவாக்குவது.

புதிய கண்டுபிடிப்பு மற்றும் தொழில்முனைவை ஊக்குவிக்கும் வகையில் தேசிய அளவில் மாவட்டந்த்தோறும் அடைக்காக்கும் மற்றும் வளர்ச்சி திட்டத்தை உருவாக்குவது.

இளைஞர்கள் மத்தியில் விளையாட்டு ஆர்வத்தை ஊக்குவிக்க தேசிய

விளையாட்டுத்திறன் கண்டுபிடிப்பு அமைப்பை உருவாக்குவது.

மருத்துவ சேவை; வாய்ப்பை அதிகமாக்கி, தரத்தை உயர்த்தி செலவை குறைப்பது.

அனைத்து இந்தியர்களுக்கும் மருத்துவ உறுதி மற்றும் மருத்துவ நலனுக்காக கையில் இருந்து செலவு செய்வதை குறைப்பது.

புதிய சுகாதார கொள்கை மற்றும் தேசிய சுகாதார உறுதி திட்டம்.

மருத்துவ வசதி அளிக்க செல்போன்களை பயன்படுத்திக்கொள்வது மற்றும் தேசிய மின் சுகாதார ஆணையத்தை உருவாக்குவது.

ஒவ்வொரு மாநிலத்திலும் எய்ம்ஸ் போன்ற அமைப்பை நிறுவுவது.

2019 ல் காந்தியின் 150 வது பிறந்த நாளின் போது **ஸ்வாச் பாரத்தை** உறுதி செய்வது.

எளிமையான வரி முறை

நடவடிக்கை இல்லாத இணக்கமான வரி செலுத்தும் முறை மற்றும் **முற்போக்கான ,எளிமையான வரி அமைப்பு.**

விவசாயம்; உற்பத்தி, விஞ்ஞானம் மற்றும் பலன் தருவது

விவசாயிகளுக்கு உற்பத்தி செலவுக்கு மேல் குறைந்தபட்சம் 50 சதவீத லாபத்தை உறுதி செய்வது.

பிராந்திய பகுதிகளில் டீ.வி சேனல்கள், ஏ.பி.எம்.பி சட்டத்தை சீரமைப்பது. விவசாய காப்பீடு வசதி அமலாக்குவது.

தேசிய நிலம் பயன்படுத்தல் கொள்கையை ஏற்பது.

தொழில் துறை; நவீனமயம்,போட்டித்தன்மை, அக்கரை கொண்டது.

இந்தியாவில் வர்த்தகம் செய்வதை எளிதாக்கும் வகையில் **இணக்கமான , வாய்ப்பளிக்கும் சூழலை** உருவாக்குவது.

நிலையான மின்சாரம் உட்பட உள்கட்டமைப்பு வசதிகளை அளித்தல்.

பல பிராண்ட் சில்லரை வர்த்தகத்தில் எப்.டி.ஐ க்கு அனுமதி மறுப்பு.

**எம்.எஸ்.எம்.ஈ** துறையை ஆய்வு செய்து சீரமைப்பது. கடன் வசதியை மேம்படுத்தி நவினமயமாக்குவது.

கிராமப்புற பகுதிகளுக்கு

கிராமங்களை இணைக்கும் எல்லா பருவத்திற்குமான சாலைகள்.

ஒவ்வொருவருக்கும் குடிநீர் எனும் நோக்கத்துடன் பிரதான் மந்திரி கிராம் சின்சாயி யோஜானா திட்டத்தை அறிமுகம் செய்வது.

அமைப்பு சாரா துறைக்கு

அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு அடையாள அட்டைகள், தொழிலாளர் வங்கி, சுகாதாரம் மற்றும் காப்பீடு வசதி.

நெசவாளர்கள், கைவினை கலைஞர்கள்'

பொற்கொல்லர்கள், நெசவாளர்கள், தச்சர்கள், குயவர்கள், சிகையலங்கார கலைஞர்கள் மற்றும் காலனி கொல்லர்கள் திறன் மேம்பாடு மற்றும் வர்த்தக மேம்பாட்டுக்கான திட்டங்கள்.

முன்னாள் படை வீரர்கள்

முன்னாள் படை வீரர்களின் குறைகளை கவனிக்க ஓய்வு பெற்ற வீரரகள் கமிஷனை அமைப்பது.

இமயமலை

மாநிலங்கள் மற்றும் துறைகள் அளவில் கொள்கை மற்றும் திறன் வளர்ப்பை ஒருங்கிணைக்க அரசுகளுக்கிடையையான ஒத்துழைப்பு திட்டமான **இமையமலைக்கான தேசிய திட்டத்தை** உருவாக்குவது.

இமயமலை நீடித்த வளர்ச்சி நிதியை உருவாக்குவது.

இமயமலை தொழில்நுட்பத்திற்காக மத்திய பல்கலைக்கழகத்தை உருவாக்குவது.

மற்ற முக்கிய திட்டங்கள்

தொல்பொருள் மற்றும் பாரம்பரியம், கலாச்சாரம் மற்றும் ஆன்மிகம், இமையமலை,பாலைவனம், கடலோரம் மற்றும் மருத்துவம் சார்ந்த 50 சுற்றுலா

மையங்களை உருவாக்குவதற்கான மாதிரி திட்டம்.

**தேசிய பல் திறன் திட்டத்தை** உருவாக்குவது.

கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை பாதுகாத்தல்.

அரசியல் சாசனத்திற்கு உட்பட்டு அயோத்தியில் நாமர் கோயில் கட்டுவதற்கான வழிகளை ஆராய்தல்.

சேது கால்வாய் திட்டம் பற்றி எந்த முடிவும் எடுப்பதற்கு முன் தோரியம் வளம் அதிக உள்ள ராமர் பாலப்பகுதியின் முக்கியத்துவம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

பசு மற்றும் அதன் பெருமை காக்கப்படும்.

நவீன காலத்திற்கு ஏற்ற வகையில் அனைத்து பாரம்பரியங்களில் இருந்தும் சிறந்தவற்றை எடுத்துக்கொண்டு பொது சிவில் சட்டம் உருவாக்குவது.

அமைப்பு சீர்திருத்தங்கள்

பிரதமர் அலுவலகத்தின் கீழ் பொருத்தமான அமைப்பின் மூலம் நிர்வாக சீர்த்திருத்தங்கள் நிறைவேற்றப்படும்.

திறன்வாய்ந்த லோக்பால் அமைப்பு

மின் கிராமம் மற்றும் விஸ்வ கிராமம் திட்டங்கள்.

கீழ் கோர்ட்களில் நீதிமன்றங்கள் மற்றும் நீதிபதிகள் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கி எல்லா மட்டங்களிலும் விரைவு நீதிமன்றங்களை அமைப்பது.

அரசுக்கான எங்கள் கொள்கை; இந்தியா முதலில்

அரசுக்கான எங்கள் நூல்; அரசியல் சாசனம்

அரசின் ஒரே அதிகாரம்; மக்களின் அதிகாரம்

அரசின் ஒரே பிரார்த்தனை ; மக்கள் நலன்

அரசின் வழி; சபா சாத்,சப்கா விகாஸ்.

எங்கள் உறுதிமொழி

திறந்த வெளிப்படையான அமைப்புகள் சார்ந்த அரசு.
செயல்திறன் மிக்க,மக்களுக்கான நிர்வாகம்,.

ஒரே பாரதம், வலிமையான பாரதம்.

பா.ஜ.க.வுக்கு வாக்களித்து தேசத்தை காப்பீர்
இந்த முறை மோடி அரசாங்கம்